## ஐயம் தெளிக
## சிவத்தமிழ்ச்செல்வர் முனைவர் நாகப்பன்

### சமயத்தில் ஏன் பாகுபாடு ?

ஐயம்: நாம் எல்லாரும் இந்துக்கள் என்றும் நமது சமயம் இந்து சமயம் என்றும் சொல்வதை விட்டுவிட்டு சைவர் என்றும் சைவ சமயம் என்றும் பிரிந்து செல்வது நல்லதா?

தெளிவு: உங்கள் ஒற்றுமை உணர்வு பாராட்டத் தக்கதுதான். அதற்காக உண்மையை மறைத்துப் பொய்யுரைத்து ஒற்றுமையை நில நாட்ட வேண்டுமா என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. இந்து என்ற சொல் உணர்த்தும் கருத்து யாது என்று வரலாற்றின் அடிப்படையில் ஆராய வேண்டும்.

இந்தியா என்ற நாடு முதலில் இந்து நாடு என்றே வழங்கப்பட்டுள்ளது. அப்போது இந்து என்ற சொல் ஒரு சமயத்தைக் குறிக்கவில்லை. சிந்து என்ற நதிக் கரையில் இருந்த புகழ் பெற்ற நாகரீகம் சிந்து வெளி நாகரீகம் என்று அழைக்கப்பட்டது. எந்த இனத்தின் நாகரீகமும் நதிக் கரைகளில்தான் தோன்றியது என்பது நாகரீகங்களின் வரலாறு. சிந்து வெளி நாகரீகமும் அப்படித்தான் சிந்து நதிக் கரையில் தோன்றி உலகச் சான்றோர்களின் கவனத்தை ஈர்த்தது. ஆகவே இந்திய நாட்டைக் குறிப்பிட சிந்து என்ற சொல் பயன்பட்டது. இந்தச் சொல்லே பின்னர் இந்து என்று திரிந்தது.

பழைய மலாய் இலக்கியங்களிலும் இந்தியா 'பெனுவ இண்டு' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காரணங்களால் இந்து என்ற சொல் ஒரு குறிப்பிட்ட சமயத்தைக் குறிக்க வில்லை என்பது புலனாகிறது.

இந்து என்ற நாட்டில் பெயர் பின்னர் இந்தியா என்று மருவியது. இந்து என்ற ஒரே பெயரில் இந்தியா ஒரே நாடாகவும் அக்காலத்தில் இல்லை. ஆங்கிலேயர்கள் இந்திய துணைக்கண்டத்தைக் கைப்பற்றித் தனித்தனிச் சிறு நாடுகளாக இருந்த நிலப் பகுதிகளை அரசியல் ரீதியாக இணைத்து ஒருங்கிணைக்கப்பட்ட நாடாக ஆக்கினர். அவர்கள் இந்தியாவை விட்டுச் என்ற போது இந்தியா ஒன்றுபட்ட நாடாகவே இருந்துவிட்டது. அதற்கு முன் இந்த நிலப்பகுதிகள் தனித் தனி நாடுகளாகவும் பல சமயம், பல இனம், பல மொழிகள் கொண்டவையாகவும் இருந்தன.

இந்தியாவில் எக்காலத்திலும் ஒரே சமயம் மட்டும் இருந்ததில்லை. தமிழர் போற்றிய சமயங்களும் ஒன்றல்ல. சிவனியம், மாலியம், முருகனியம் போன்றவற்றோடு பல சிறு தெய்வ வழிபாடுகளும் தென் தமிழ் நாட்டில் இருந்தன. இந்தியாவின் வட பகுதியிலிருந்து சமணம், பவுத்தம் போன்ற மதங்களும் இந்தியாவுக்கு அப்பாலிலிருந்து கிறித்துவம், இஸ்லாம் போன்ற மதங்களும் வந்தன. இவை தவிர கடவுளை நம்பாத சாருவாகம், கடவுள் நீங்கலாக உயிர், உலகம், வினை போன்றவற்றை நம்பும் மதங்களும் இந்தியாவில் இருந்தன. இப்போதும் இருக்கின்றன.

இந்தியாவின் சமய வரலாறு இப்படி நீண்டு விரிந்து போகிறது. பலவாக இருக்கும் இந்திய சமயச் சிந்தனைகள் மறுக்கப்பட முடியாத வரலாற்று உண்மை. இவற்றுக்கிடையில் பிணக்குகள் அவ்வப்போது ஏற்பட்டன என்பதையும் மறுப்பதற்கில்லை. பிணக்குகள் எங்கேதான் இல்லை? ஒரு வீட்டில் இருமர் மட்டும் வாழ்ந்தாலும் பிணக்கு இருக்கத்தான் போகிறது. ஆனால் பிணக்குகளுக்கும் ஒரு மறுபக்கம் உண்டு. சுதந்திரமான சிந்தனை பிணக்குகளில் மறுபக்கமாக இருப்பதை ஊன்றிக் கவனித்தால் தெரிய வரும்.

வரலாற்றின் அடிப்படையில் தொடர்ந்து வரும் இந்த வேற்றுமைகளை மறுப்பது உண்மையை மறுப்பதாகிறது. ஆகவே வேற்றுமைகளை அழிப்பது சிந்தனைச் சுதந்தரத்தை அழிப்பதாகிறது. அப்படியும் ஓர் ஒற்றுமையை உருவாக்கினால் அது போலியான ஒற்றுமையாகவே இருக்க முடியும். மதங்கள் எத்தனையாக இருந்தாலும் அவற்றுக்கிடையில் அன்பு, மனிதநேயம் போன்ற பண்புகள் ஒற்றுமையுடையனவாக உள்ளன. ஆகவே மதங்களுக்கு அப்பால் மனிதன் ஒன்றுபடுவதற்குரிய வாய்ப்புகள் எப்போதும் இருக்கவே செய்கின்றன.

'இந்து' சமயத்தை விட்டுச் சைவர்கள் மட்டுமே பிரிந்து போவதாக நீங்கள் கூறுவது சரியல்ல. வைணவர்கள் தங்களை வைணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெருமையாகச் சொல்லிக்

கொள்கின்றனர். அவர்களின் சமயச் சின்னங்களும் கிரியைகளும் மெய்ப்பொருள் பற்றிய கோட்பாடுகளும் மாறுபட்டவையாகவும் உள்ளன. தங்களுக்குரிய மரபுகளிலிருந்து வைணவர்கள் பெரும்பாலும் மாறுவதில்லை.

வைணவர்களுக்கு இருப்பதை போன்றே சைவர்களுக்கும் தனி மரபுகள் உண்டு. தென் தமிழ் நாட்டில் சிறுதெய்வங்களை மக்கள் வழிபட்டபடி இருந்த காலத்திலேயே அறிவு சார்ந்த ஒரு சிறிய குழுவினர் சிவனைப் பரம்பொருளாக வழிபடும் மரபினை உடையவராய் இருந்தனர். இவர்களில் இயல்பாகவே ஞானியராய் இருந்தவர்கள் இறைவன் உணர்த்திய ஆகமங்களை உணர்ந்தனர்.

ஆகமங்களின் அடிப்படையில் சிவனியம் அல்லது சைவ சமயம் உருவானது. இதனை நாயன்மார்களில் காலத்தால் மிக மூத்தவரான திருமூலர் தம் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார்.

*சைவ சமயத் தனிநாயகன் நந்தி*
*உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு*
*தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய*
*வையகத் துள்ளார்க்கு வகுத்து வைத்தானே 1547*

இம்மந்திரத்தில் சைவ சமயம் என்ற பெயரைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இச்சமயத்தின் தலைவன் நந்தி என்னும் சிவபெருமானே என்றர். சைவ சமயம் உயிர்க்குலம் அனைத்தும் உய்வதற்கு இறைவன் வகுத்த நெறி என்றார். இதனைக் குரு நெறி என்றும் கூறுகிறார். இறைவனே உயிர்களின் நாயகன் (பதி) ஆகி குருவும் ஆகி உயிர்களை பிறவப் பெருநெறிக்கு வழி நடத்துவான் என்பது திருமூலரின் கருத்தாக உள்ளது. இதனைத் தெய்வச்சிவநெறி என்றும் சன்மார்க்கம் (ஞானநெறி) என்றும் திருமூலர் கூறுகிறார்.

சைவ சமயம் இறைவனே வகுத்தது. அதனால் உய்யலாம். அதுவே குருநெறி. அதுவே சன்மார்க்கம் என்றெல்லாம் திருமூலர் நமக்கு உணர்த்தியபின் அதனை மறுப்பது இறை மறுப்பே ஆகும்.

சைவ சமயம் நம்பிக்கை சார்ந்த சமயம் அல்ல. ஆரியர் அல்லது ஆரிய வழி வந்த பிராமணர் உருவாக்கிக் கொடுத்த சமயமோ நெறியோ அல்ல. இந்தியப் பெருநிலம் முழுவதும் வழங்கிய சைவம் தமிழ் நாட்டில்தான் தெளிந்து செம்மைப்பட்டது. அறிவார்ந்த சிந்தனையின் அடிப்படையில் தெளிந்த இந்தச் செந்நெறியில்தான் திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்கள் என்ற மெய்ப்பொருள் உணர்த்தும் நூல்களும் எழுந்தன. இவற்றைக் கற்றுப் பயன் பெறுவதும் இவற்றைக் கற்றவர்கள் தங்களைச் சைவர் என்று சொல்லிக் கொள்வதிலும் தவறு என்ன இருக்கிறது?

இந்து என்று ஒருவர் தன்னைச் சொல்லிக் கொண்டாலும் இந்திய சமயங்களில் ஏதேனும் ஒன்றைக் கடைப்பிடிப்பவாராகவே இருக்கிறார். அவர் தான் கடைப்பிடிக்கும் சமயத்தின் பெயராலேயே தன்னை அழைத்துக் கொள்வதும் குற்றமல்ல. 'இந்துக்கள்' அல்லாத மற்றவர்களும் இப்படித்தான் செய்கிறார்கள்.

### சிறுதெய்வங்களுக்கும் முழுமுதல் கடவுளுக்கும் என்ன வேறுபாடு?

ஐயம்: சில திருமுறைப் பாடல்களில் சிறுதெய்வங்களை வணங்கக் கூடாது. முழுமுதல் பரம்பொருளையே வழிபட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. சிறுதெய்வத்துக்கும் பரம்பொருளுக்கும் என்ன வேறுபாடு?

தெளிவு: திருமுறைகளில் திருமுறை ஆசிரியர்கள் பல இடங்களில் சிறுதெய்வ வழிபாட்டைக் கண்டித்துள்ளனர். கண்டித்து, முழுமுதல் பரம்பொருளையே போற்றும்படி வற்புறுதியுள்ளனர். பரம்பொருளாம் சிவனையன்றி வேறொரு தெய்வத்தை எக்காலத்திலும் வழிபட மாட்டோம் என்று அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

*'என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்*
*இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை*
*சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்*
*சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்...' 6.98.5*

என வரும் தேவாரத்தில் சிறுதெய்வத்தை வழிபடமாட்டோம் என்று திருநாவுக்கரசர் அறிவிக்கின்றார். சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம் என்பதால் சிவபெருமானையே வழிபடுவோம் என்று உறுதியாய்க் கூறுகின்றார். சிவபெருமான் திருவடியே என வரும் தொடரில் உள்ள ஏகாரம் தேற்றம் என்னும் தெளிவைக் குறிக்கின்றது. இவ்விரண்டு அடிகளால் சிறுதெய்வ வழிபாட்டை மறுப்பதோடு சிவபெருமான் திருவடியை மட்டுமே போற்ற வேண்டும் என்ற கருத்தையும் அப்பர் பெருமான் தெரிவிக்கின்றார்.

இக்கருத்தை மாணிக்கவாசகரும் வற்புறுத்துகிறார்.

*'பச்சைத்தால் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்*
*உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக் கொண்டு*
*எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோ என்*
*சித்தத்தாறு உய்ந்தவா றென்றே உன் திறம் நினைந்தே' 8. திருவேசறவு 4*

என வரும் பாடலில் சிறுதெய்வத்தைப் போற்றுவதற்கு என்னை விட்டுவிடாமல் என் மனத்தை உன் பக்கம் ஈர்த்துக் கொண்ட கருணையை என்னவென்று போற்றுவேன் என்று வியக்கிறார் மாணிக்கவாசகர். எச்சத்தார் என்னும் சொல்லால் சிறுதெய்வங்கள் குறைபாடுகள் கொண்டவை என்றும் கூறுகின்றர்.

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் நாயன்மார்களைப் பற்றிக் கூறும்போது சிவபெருமானையன்றிப் பிற தெய்வங்களை வணங்காதவர்கள் என்று கூறுகின்றார்.

சிறுதெய்வம், பரம்பொருள் இரண்டுக்கும் என்ன வேறுபாடு என்பதை திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் விவரிக்கின்றன.

*'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே*
*மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்*
*வேதனைப்படும் பிறக்கும் இறக்கும் மேல்வினைகள் செய்யும்*
*ஆதலால் இவையிலாதான் அறிந்து அருள் செய்வனன்றே' 115*

என்று சிவஞானசித்தியார் என்னும் நூலைச் செய்த அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார். மாதொரு பாகனாகிய சிவபெருமானைத் தவிர நீங்கள் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவை சிறுதெய்வங்களே ஆகும் என்பதால் அவற்றால் உங்களுக்கு எதையும் அருள் செய்ய முடியாது. ஏனென்றால் சிவபெருமானைத் தவிர பிற தெய்வங்கள் இன்பதுன்பமாகிய வேதனைப்படும், நம்மைப் போல் வினைகளும் செய்து வினைக்கு ஏற்பப் பிறக்கும் இறக்கும். ஆகவே, நீங்கள் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் பிறப்பு இறப்பு, வேதனை, வினைகள் ஆகியன இல்லாத சிவபெருமானே உங்களுக்கு அருள் செய்கிறான் என்பது அருணந்தி சிவாச்சாரியாரின் கருத்து. மெய்கண்ட சாத்திரங்கள் சைவ ஆகமங்களின் திரண்ட கருத்தினையே தெரிவிக்கின்றன என்பதால் சிவஞான சித்தியார் என்னும் இந்த நூலில் உள்ள இந்தப் பாடலை ஆகம உண்மையாக நாம் கருத வேண்டும்.

சிறுதெய்வங்கள் கோப குணம் கொண்டவை. அவற்றின் கோபத்தைத் தணிக்க உயிர்ப்பலி கொடுத்தால் கோபம் நீங்கி நன்மை செய்யும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இவை வழிபடப்பெறுகின்றன. பலி கொடுக்காவிட்டால் கோபம் கொண்டு தீமை செய்யும் என்ற அச்சமே சிறுதெய்வ வழிபாட்டின் அடித்தளம் ஆகின்றது. சிறுதெய்வ வழிபாடு சமூக வரலாற்றோடு நெருக்கமானது. இந்தத் தெய்வங்கள் தங்கள் கிராமத்தில் தங்கள் குடும்பத்தில் கூடவே இருக்கின்றன என்ற நம்பிக்கையும் சிறுதெய்வ வழிபாட்டின் வலிமைக்குக் காரணமாகின்றது. சிறுதெய்வங்கள் பலவாக இருப்பதால் தேவைக்கு ஒன்றாக இவை வழிபடப்பெறுகின்றன.

சிறுதெய்வங்கள் ஒரு நிலத்திணை அல்லது ஓர் ஊரின் எல்லைக்குள் அடங்கிவிடுவது. உயிர்களுக்குத் தேவையான உலகங்கள், உடல்கள், நுகர்ச்சிப்பொருள்கள் ஆகியவற்றைப் படைக்க இவற்றால் முடியாது.

முழுமுதல் கடவுள் வழிபாடு இந்தப் பண்புகளுக்கு மாறானது. முழுமுதல் கடவுள் ஒன்றே. ஒன்றுக்கு மேல் இல்லை. ஏகன் என்று சைவ நூல்கள் கூறும். பரம்பொருளே உயிர்கள் பொருட்டு உலகங்களையும்

உயிர்களுக்கு வேண்டிய உடல்களையும் பல கோடி ஆண்டுகளாகப் படைத்தும் காத்தும் அழித்தும் மீண்டும் படைத்தும் வருகின்றது. இப்படிப் பல பிறவிகளில் பிறக்கும் உயிர்கள் திருவருளை உணரும் பக்குவம் வந்த போது வீடு பேறு என்னும் பிறவா நிலையை அருள்வதும் முழுமுதல் பரம்பொருளே ஆகும்.

முழுமுதல் பரம்பொருளுக்கு இன்பதுன்பம், வினைகள், பிறப்பு இறப்பு ஆகியன இல்லை. உயிர்கள் மீது என்றும் கருணை உள்ளதாக இருப்பதுவே முழுமுதல் பரம்பொருளின் இயல்பு. ஆகவே அது என்றும் உயிர்கள் மீது கோபம் கொள்வதில்லை. இக்காரணங்களால் முழுமுதல் கடவுளை வழிபடுவோர் அச்சத்தினால் அன்றி அன்பினால் வழிபாடு செய்கின்றனர்.

முழுமுதல் கடவுள் வழிபாட்டைப் போன்றே சிறுதெய்வ வழிபாடும் காலத்தால் மிக மூத்தது. ஆகவே தமிழரின் சமூக வாழ்வில் சிறுதெய்வ வழிபாடு அசைக்க முடியாத இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. சிறுதெய்வ வழிபாடு தமிழ் நாட்டில் மட்டுமல்ல, உலகின் எல்லா நாடுகளிலும் இருந்தது. அந்த நாடுகளில் தோன்றிய சமயச் சான்றோர்கள் முழுமுதல் பரம்பொருள் வழிபாட்டை வற்புறுத்தியபோது மக்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். தமிழ் நாட்டிலும் நாயன்மார்கள் பரம்பொருள் வழிபாட்டினை வற்புறுத்தினர். நம்மவர் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

நம்மவர்களுக்கு முறையான சமயக் கல்வி அளிக்கப்படாத காரணத்தால் சிறுதெய்வ வழிபாடும் சமயத்தின் பேரால் ஏராளமான மூட நம்பிக்கைகளும் வளர்ந்துவிட்டன. அச்சத்தால் செய்யும் சிறுதெய்வ வழிபாட்டிலிருந்து விலகி அன்பினால் செய்யும் முழுமுதல் வழிபாட்டுக்கு நம்மவர் திரும்ப வேண்டும்.